Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 33 பாலம்: 14 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 15, 2023

# ரொறொன்ரோ நகரசபை முதல்வராக ஒலிவியா சோ

ரொறொன்ரோ மக்கள் நகர முதல்வராக 2023 ஜுன் 26இல் நடைபெற்ற நகரசபைக்கான தேர்தலில் வெள்ளையினத்தைச் சேராத ஒருவரை முதற்தடவையாகத் தெரிவு செய்துள்ளனர். ரொறொன்ரோ நகர சபையின் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட ஒலிவியா சோ ரொறொன்ரோ நகரசபையின் மூன்றாவது பெண் நகர முதல்வர்.

ரொறொன்ரோ நகரசபைப் பகுதியில் வாழ்வோரில் 55.7%ஆனோர் சிறுபான்மை இனத்தவர்கள் என்றும், 46.6% மக்கள் கனடாவிற்குக் குடி பெயர்ந்தவர்கள் என்றும் 2021ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது.

தனது தேர்தல் வெற்றியின் பின்னர் ரொறொன்ரோ நகரசபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட ஒலிவியா சோ மகிழ்ச்சியுடன் திரண்டிருந்த கூட்டத்தினரிடம் உரையாற்றும்போது, "ரொறொன்ரோ நம்பிக்கைக்குரிய இடம், இரண்டாவது வாய்ப்பினைக் கொடுக்கும் இடம். சென். ஜேம்ஸ் ரௌன் (St. James Town)இல் கனடாவிற்குக் குடிபெயர்ந்து வாழ்ந்த சிறுமியை உங்கள் புதிய நகர முதல்வராக உங்கள் முன் நிறுத்தி வைத்திருக்கும் நகரம்" என்றார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தனது தந்தையார் மனநலம் பாதிக்கப்பட்டபடியால் வேலை செய்யவில்லை. தனது தாயார் பணிப்பெண்ணாக தங்கும் விடுதி (Hotel) ஒன்றில் வேலை பார்த்ததன் மூலம் தங்கள் குடும்பத்துக்கு இருப்பிட வசதியையும், உணவு அளிக்கும் வசதியையும் செய்து வந்தார். தன்னைப்போல ஒரு பெண் இவ்வாறு வாழ்ந்து, வளர்ந்து வரக்கூடிய இடமாக ரொறொன்ரோ


Newly elected Mayor Olivia Chow

நகரம் இருந்தது. இவ்வாறு வளர்ந்து வந்த பெண்ணால் பல்கலைக்கழகப் படிப்பிற்கு பின்னர் ஓர் அடுக்கு மாடிக்குடியிருப்பை சொந்தமாக வாங்க வசதியளித்த இடமாக ரொறொன்ரோ இருந்தது என்றார்.

ஒலிவியா சோ, "அம்மாவை மோசமாக எனது அப்பா காயப் படுத்திய பின்னர் அம்மா என்னுடன் வாழ்ந்து தனது வாழ்க்கையை மீண்டும் கட்டி யெழுப்பி வந்தார்" என்றார். இப்போது பல தசாப்தங் களாகப் புறக்கணிக்கப்பட்ட நகரத்தைத் தன்னைப் பின்தொடரும் தலைமுறையினருக்காக மீண்டும் எல்லோருக்கும் கட்டுபடியான செலவினங்களுடன் சிறப்பாக வாழக்கூடிய நகரமாக்க அப்பெண் விரும்புகிறார் என்று தனது தேர்தல் வெற்றியின் பின்னர் ஒலிவியா சோ கூறினார்.

ஜுன் 27இல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது சீன மொழியில் (Cantonese) கேட்கப்பட்ட ஊடகவியலாளரின் கேள்விக்கும் சீன மொழியில் பதிலளித்ததன் மூலம் இவ்வாறு சீன மொழியில் பதிலளித்த முதலாவது நகர முதல்வராகவும் ஒலிவியா சோ இருந்தார்.

2023 ஜுன் 26இல் நடைபெற்ற ரொறொன்ரோ நகரசபைக்கான இடைத்தேர்தலில் 102 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். இவ் இடைத் தேர்தல் ரொறொன்ரோ நகர முதல்வராக இருந்த ஜோன் ரோறி 2023 பெப்பிரவரி 17ஆம் திகதி நகர முதல்வர் பதவியில் இருந்து விலகியதனால் நடைபெற்றது. முன்னாள் நகர முதல்வரான ஜோன் ரோறி நகர முதல்வர் பதவிக்கு வேட்பாளராகக் கேட்ட Ana Bailao இற்கே வாக்களிக்குமாறு ரொறொன்ரோ மக்களைக் கேட்டிருந்தார். Ana Bailao ரொறொன்ரோ நகரசபை உறுப்பினராக 2010ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டுவரை Devenport வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். அத்துடன் 2017ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டுவரை துணைநகர முதல்வராக இருந்தவர். ரொறொன்ரோ நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டவர்களில் இவருக்கு மட்டுமே இவ்வாறான அனுபவம் இருக்கிறது.

ஒன்றாறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் (Dough Ford) நகர முதல்வர் பதவிக்கு வேட்பாளராகக் கேட்ட Mark Saundersஇற்குத்

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc.

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com





# For All Your Private Mortgage Needs

**8T Capital**

Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVA**
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



**JUTHIS KUPER**
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கொக்குத்தொடுவாய் புதைகுழி சொல்லப் போகும் உண்மை!




முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் மனித எச்சங்கள் இனங்காணப் பட்டுள்ளமை பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரத்தைக் கொண்டு நிலத்தை தோண்டிய போது, விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் அணியும் சீருடைகளுடன் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன. இறுதிக்கட்டப் போரின் போது போராளிகள் உயிருடன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பெண் போராளிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். உறவினர்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட போராளிகள் காணாமலாக்கப்பட்டனர். காணாமலாக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகவே நம்பப்படுகின்றது. இவர்களின் உடல்கள் யாவும் போர் நடைபெற்ற மண்ணிலேயே புதைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கொக்குத்தொடுவாயில் மண்ணைத் தோண்டும் போது வெளிவந்த பெண் போராளிகளின் சீருடையும், மனித உடல் எச்சங்களும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு புதைக்கப்பட்டவர்களினுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த புதைகுழியை சரியான முறையில் அகழ்ந்து உண்மையை வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில், கடந்த 06ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் பேரில் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டு 13 எலும்புக் கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டது. இந்த புதைகுழியின் அகழ்வுப் பணி சர்வதேச அமைப்புக்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.



சர்வதேச கண்காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்த அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களையும் நடத்தி வருகின்றன.

புதைகுழி காணப்படும் பகுதியை பார்வையிடும் நீதித்துறை சார்ந்தவர்களும், மனித உரிமை அமைப்புக்களை சேர்ந்தவர்களும் இவ்வாறான கருத்தையே முன்வைத்துள்ளனர்.

குறித்த பகுதியை பார்வையிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் கருத்து தெரிவிக்கும்போது, இந்த அகழ்வு நடவடிக்கை முறைப்படி செய்யப்படுவதாகத் தெரியவில்லை எனவும், அதனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்கின்ற சர்வதேச நியதிகள் பின்பற்றப்படுவதாகவும் தெரியவில்லை என்றும் கூறினார்.

புதைகுழியில் ஒரு மனித உடலை தோண்டியெடுத்து செய்கின்ற பரிசோதனைக்கும் பல உடலங்கள் உள்ள மனித புதைகுழியாக இருக்கின்ற ஒரு பகுதி தோண்டப்பட்டு எடுப்பதற்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. அதனை செய்வதற்காக சர்வதேச நியதிகள் இருக்கின்றன. நிலைமைகளை அவதானிக்கும்போது, உண்மையை கண்டறிவதற்கு அரசாங்கத்திற்கு முழுமையான மனதில்லாமல் இருப்பதும், அவற்றை மூடி மறைப்பது அவர்களின் நோக்கமாக இருப்பதுபோல் தோன்றுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த இடத்திலிருந்து எடுக்கப்படுகின்ற சான்றுப் பொருட்கள் கூட கவனமாகப் பேணி பாதுகாக்கப்படவில்லை. இந்த இடத்தினை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள் என்கின்ற கேள்விக் குறியும் இருக்கின்றது. புலனாய்வாளர்கள் ஏராளமானோர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.



விடயத்தை மறைக்க நினைப்பவர்கள் அடுத்த நடவடிக்கைக்கு தயாராகின்றனர். ஆகையால் சான்றுகள் சரியான விதத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். சரியான முறையில் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் மேற்பார்வை உடனடியாக கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் சுமந்திரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நிறுவனப் பிரதிநிதிகளும், மருத்துவர்களும் பிரசன்னமாகியிருந்தனர். அனைவரதும் கலந்துரையாடலின் அடிப்படையில், சர்வதேச நியமங்களை பின்பற்றி புதைகுழி அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தே முன்வைக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பில் பொறுப்புக்கூற மறுக்கும் அரசாங்கத்திற்கு இவ்வாறான புதைகுழிகள் வெளிப்படுத்தும் உண்மைகள் பெரும் தலையிடியாகவே இருக்கும். அதனால் எவ்விதத்திலேனும் உண்மைகளை முடிமறைக்கவே அரசாங்கத் தரப்பு முயலும். எனவே, தமிழ் அரசியல்வாதிகளும், சட்ட வல்லுநர்களும், மனித உரிமை அமைப்புகளும் கொக்குத்தொடுவாய் புதைகுழியின் உண்மைகளை வெளிக்கொணர்வதில் மிகக் கவனமாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்.


விளம்பரம்
VLAMBARAM

33ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.



'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## Bunker – பதுங்கு குழி

மனிதப் பெறுமதிகளை அழித்து
ஒழிக்கும் துப்பாக்கிச் சன்னங்கள்
விமானக்குண்டுகள்
உயிர் மூச்சுகளையும் சேர்த்துக்
காற்று வெளிக்குப் பலம் சேர்க்கின்றன


ஆயுத மலையிலிருந்து அருவி உருவாகி
ஓடுகிறது இரத்தம் தோய்ந்த ஆறுகளாக;

மதம் மொழி இனம் வர்க்கம்
என்ற அடையாளம் தெரியாமல்
அருகருகே வரிசையாய்க்
கிடத்தப்படுகின்றன
உடல் சிதைத்த போர்த்தொழிலாளிகள்.

கடலில் மிதந்துவந்த சாக்குப்பையை
அவிழ்த்துப் பார்க்கும்போது பயமும்
வெறுப்பும் கத்தியால் அறுத்து
எடுக்கப்பட்டுள்ளது
யோனியற்ற இளம் சீருடைச் சடலம்.

எலும்புத் தடியை வலிந்து வளைத்து
உயிர் நரம்பை இணைத்துப் போராடிய
கருகிய பூக்கள் மீண்டும் மலரும்
என்றொரு நம்பிக்கை தொடர்கின்றது.

சேற்றில் விமானக்குண்டு விழுந்தால்
கந்தக நஞ்சு, சிறு துண்டுகள்
உடலைத் துளைக்காது என்று நினைத்து
வற்றிய சேற்றுக் குளத்தினுள்
பதுங்கியிருந்த இடம்பெயர்
அப்பாவிகளின் உயிர் சிதறிய
தசைத்துண்டுகள் இரவில்
நரிக்கூட்டத்துக்கு உணவாகியது.



கிடங்குவெட்டி அமைத்த இருட்டு
'பங்கர்' உள்ளே அவசரமாக
ஓடிப்போய்ப் புகுந்து பதுங்கியிருந்த
உழைப்பாளியை

கருநாகம் சீறிக்கொத்துகிறது.

வெள்நுரை;
கடைவாயால் கக்குகிறது;

பங்கர்: நிலத்தில் கிடங்கு வெட்டி, அது தூர்ந்து போகாதபடி, மரக்குற்றிகளாலும் இரும்புத் திரள்களாலும் மண் மூடைகளாலும் சுரங்க அறைகள் கட்டுவர். போர் விமானம் குண்டு போடும்போது, பொதுமக்கள், ஆயுதப் போராளிகள், இராணுவத்தினர் முதலியோர் இத்தகைய சுரங்கத்தினுள் புகுந்திருந்து, தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவர்.



முத்துராஜா

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தான் ஆதரவளிப்பதாகத் தெரிவித்தி ருந்தார். Mark Saunders 2015ஆம் ஆண்டில் இருந்து 2020ஆம் ஆண்டுவரை ரொறொன்ரோ வின் நகர காவலர் தலைவராகப் பணியாற்றியவர். இவர் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத் தேர்தலிலும் டக் ஃபோர்ட்இனுடைய ஒன்ராறியோ பழமைவாதக் கட்சியின் சார்பில் டொன்வலி மேற்குத் தொகுதியில் போட்டியிட்டவர்.



Ana Bailao Thanks: webpage

இவ்வாறு முன்னாள் நகர முதல்வர் ஜோன் ரோறி Ana Bailaoஇற்கும் தற்போதைய ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட் Mark Saundersஇற்கும் ஆதரவு அளித்தாலும், நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிடும் 102 பேரில் ஒலிவியா சோ ஊடகங்கள் நடத்திய கருத்துக்கணிப்பில் தொடர்ந்து முன்னிலையில் திகழ்ந்தார். இவரது கொள்கை முக்கியமாக வாடகைக் குடியிருப் பாளர்களுக்கு ஆதரவளிப்பதாக இருந்தது. ஒலிவியா சோ 1998ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டுவரை ரொறொன்ரோ நகரசபை உறுப்பினராக இருந்தவர். பின்னர் 2006ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் ஆண்டுவரை புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக Trinity - Spadina தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார்.

ஒலிவியா சோ 2014ஆம் ஆண்டில் தனது நாடாளுமன்றப் பதவியில் இருந்து விலகி ரொறொன்ரோ நகரசபைத் தேர்தலில் நகர முதல்வருக்கும் போட்டியிட்டு 226,879 வாக்கு களைப் பெற்றிருந்தார். அப்போது அவர்

| வேட்பாளர் பெயர் | பெற்ற வாக்குகள் | % |
|---|---|---|
| Olivia Chow | 268,676 | 37.2 |
| Ana Bailao | 234,647 | 32.5 |
| Mark Saunders | 62,017 | 8.6 |
| Anthony Furey | 35,839 | 5.0 |
| Josh Matlow | 35,516 | 4.9 |
| Mitzie Hunter | 21,170 | 2.9 |
| Chole Brown | 18,763 | 2.6 |
| 95 Others | 46,249 | 6.4 |
| மொத்த வாக்குகள் | 722.877 | |

வாக்களித்தோரின் 23% வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்திருந்தார்.

ஒலிவியா சோ 2023 ஜுன் 26இல் நடைபெற்ற ரொறொன்ரோ நகர முதல்வருக்கான தேர்தலில் 268,676 வாக்குகளைப் பெற்று நகர முதல்வராகத் தெரிவானார். இம்முறை வாக்களித்தோரில் 37%ஆன வாக்குகளை அவர் பெற்று முதலாமிடத்திற்கு வந்தார். இம்முறை நடைபெற்ற தேர்தல் முடிவுகள்:-

ரொறொன்ரோ நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ள 2 மில்லியன் வாக்காளர்களில் 38%ஆனவர்களே இத்தேர்தலில் வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் சில ஊடகங்கள் கனடாவின் மிகப் பெரிய நகரத்தின் முதல்வராகப் பணியாற்ற அந்நகரத்தில் வாக்களிக்கத் தகுதியுள்ளளோரில் 14%ஆனோரின் வாக்குகளைப் பெற்றே ஒலிவியா சோ நகர முதல்வரானார் எனத் தெரிவித்துள்ளன. ரொறொன்ரோ நகரின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் 16 பில்லியன் ஆகும். அத்துடன் ரொறொன்ரோ நகரசபை முதல்வருக்கு ரொறொன்ரோ நகரசபையின் 25 உறுப்பினர்கள் எடுக்கும் முடிவை தனது வீற்றோ அதிகாரத்தால் மாற்றும் திறனும் உண்டு.

ஒலிவியா சோவின் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஒன்ராறியோ முதல்வர் அவருக்குத் தனது வாழ்த்தினைத் தெரிவித்தார். அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "நாங்கள் ஒன்றாக வேலை செய்வோம், இருவரும் சந்தித்து உரையாடும்போது எங்களுக்கு இடையில் ஒரு பொதுவான சமரசநிலையைக் காணுவோம். இது முடியும், ஏன்னென்றால் ஒலிவியா உண்மையில் ஒரு நல்ல மனிதர்." என்றார்.

டக் ஃபோர்ட் மேலும் தெரிவிக்கையில், "பலமான ஒன்ராறியோவைக் கட்டியெழுப்ப எங்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கும் எவருடனும் நான் பணி யாற்றத் தயாராக இருக்கிறேன் என்பதை நான் எப்போதும் நிரூபித்து வருகிறேன். ஒன்ராறியோ பழமைவாதக் கட்சியின் முன்னாள் தலைவர் தற்போது மில்ரன் நகர முதல்வராக இருக்கிறார். அத்துடன் ஒன்ராறியோ லிபரல் கட்சியின் முன்னாள் தலைவர் தற்போது வோஃண் நகர முதல்ராக இருக்கிறார். அவர்களுடன் நல்ல உறவு எனக்கு இருப்பது இதற்கு ஒரு சான்று" என்றார்.

அதேவேளையில் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட ஒலிவியா சோவும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "நான் முதல்வர் டக் ஃபோர்ட் உடன் முழுமையாக ஒத்துழைத்து வேலை செய்ய முடியும். நாங்கள் இருவருமே இந்த நகரத்தை நேசிக்கிறோம். நிச்சயமாக எங்கள் இருவருக்கும் இடையில் ஒரு பொதுவான சமரசநிலையைக் காண முடியும்" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், தான் ரொறொன்ரோ நகர முதல்வருக்குக் கிடைத்த வீற்ரோ அதிகாரங்களைப் பாவிக்க மாட்டேன் என்றார். இது குறித்து ஒன்ராறியோ மாகாண முதல்வரிடம் ஊடகவியலாளர் கருத்துக் கூறுமாறு கேட்டபோது டக் ஃபோர்ட், "இவ் வீற்ரோ அதிகாரத்தை நகர முதல்வர் பாவிப்பதும் அல்லது பாவிக்காமல் விடுவதும் அவரது விருப்பம் என்றார். அவர்



Olivia Chow and Jennifer McKelvie Thanks Facebook

விரும்பினால் அவ் அதிகாரத்தைப் பாவிக்கலாம். அவர் விரும்பாவிட்டால் அந்த அதிகாரத்தைப் பாவிக்கத் தேவையில்லை. மாகாண அரசு நகரசபைக்கு எங்களது நியாயமான பங்களிப்பைச் செய்கிறோம். நான் புதிய நகர முதல்வருக்கு ஓர் அறிவுரை கூற விரும்புகிறேன். உங்களுடைய நகர சபையின் நிதி விவகாரங்களை நீங்கள் முதலில் சரிசெய்து ஒழுங்கமைக்க வேண்டும். நகரசபையின் நிதி விவகாரங்களைச் சரி செய்யாமல் எப்போதும் மத்திய அரசிடமோ அல்லது மாகாண அரசிடமோ நிதி உதவி கேட்டு வர முடியாது. நாங்கள் எப்போதும் உதவத் தயாராக இருக்கிறோம். ஆனால், அங்கு பல வீண் செலவுகள் மற்றும் வீண் விரயங்கள் உள்ளன. முதலில் அதைச் சரிசெய்ய வேண்டும்" என்றார்.

ரொறொன்ரோ நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட ஒலிவியா சோவை ஜுன் 27இல் ரொறொன்ரோ நகரசபைக்கு வரவேற்ற துணை முதல்வர் Jennifer Mckelivie தாங்கள் நகர முதல்வர் ஜுலை 12ஆம் திகதி பதவி ஏற்பதற்கான வழிவகைகளை செய்வதாகக் கூறினார்.

ஒலிவியா சோ 1957 மார்ச் 24இல் பிரித்தானியா வின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த Hong Kongஇல்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



## நாமும் நமது இல்லமும் 635

# 2001ஆம் ஆண்டிற்கு பின்னர் அதிகவட்டி 5%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கி புதன்கிழமை, யூலை 12, 2023 அன்று தனது வட்டி வீதத்தை 4.75% இலிருந்து 0.25%இனால் அதிகரித்து 5.0% ஆக்கியுள்ளது.

பணவீக்கத்தால் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக வங்கியின் ஆளுமை ரிம் மக்கெல்லம் தெரிவித்திருந்தார். புதியவர்களின் கனடிய வருகை, ஆதன இருப்பிடத்திற்கு, நெருக்கடியைக் கொடுக்கின்றது.

ஆதன வியாபாரம் மேலும் நெருக்கடியில் இருக்கின்ற போதிலும், வாடகைத்தேவை அதிகரிப்பதனைக் காணலாம். இதற்கு முக்கிய காரணம் புதியவர்களின் வருகை. பணவீக்கம் அதிகூடியதாக 8.1% (2022)இலிருந்து மே 2023ஆம் ஆண்டில் 3.4%ஆகக் குறைந்து இருந்தது. மேலும் பணவீக்கத்தை குறைக்க வேண்டும் என மத்திய வங்கியும் அதன் ஆளுநர் குழுவும் எதிர்பார்ப்பதால் வட்டிவீத அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது அடமானக்கடன் (Mortgage), கடன் (Loan) பெற்றோர்களிற்கு மேலும் தகுந்த நெருக்கடியை கொடுக்கப்போகின்றது. ஏற்கனவே இக்கட்டான நிலையில் இருக்கும் ஆதன வியாபாரம் எதிர்வரும் ஆறுமாதம் தொடக்கம் ஒரு வருடம் மிகவும் இறுக்கமான காலமாக எதிர்பார்க்கலாம்.

2023இன் முதல் கால்பகுதியில் ஏற்பட்ட ஆதன வியாபாரம் இரண்டாவது கால் ஆண்டின் சிறிது மாற்றம் ஏற்பட்டு இருந்தது. எதிர்வரும் கால்பகுதிகளில் நிச்சயம் இறக்கம் ஏற்படும். ஆதன வியாபாரமும் விலையிலும் இறக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். மாதாந்த கட்டுப்பணம் செலுத்துபவர்களின் நிலை மேலும் இறுக்கம் அடைவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் புதிதாக ஆதனக்கடன் பெறுபவர்களின் நிலைமையும் இறுகிக் கொண்டு வருகின்றது.

இதனால் ஆதனம் வாங்குபவர்கள், முதல் தர நிதி நிறுவனங்களிடம் ஆதனக்கடன் பெறுவதனை தவிர்த்து, மற்றய நிதி நிறுவனங்களை நாட வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் மேலதிக வட்டி வீதத்தை அடமானக் கடனிற்கு செலுத்த வேண்டியுள்ளது.

இந்த 0.25% அதிகரிப்பு கனடாவின் சரித்திரத்தில் ஏப்ரல் 2001இற்கு பிற்பாடு அதிக வங்கி வட்டி வீதமாகக் காணப்படுகின்றது. வட்டிவீத அதிகரிப்பை நியாயப்படுத்திய கனடிய வங்கி ஆளுனர், எதிர்பார்த்தது போல பணவீக்கம் இறங்க வில்லை. 2024இன் இறுதியில் பணவீக்கம் 2% என்ற வங்கியின் இலக்கை அடையும் என முன்பு கூறியிருந்த ஆளுனர், இப்பொழுது 2025இன் இரண்டாவது காலாண்டு மட்டில் 2% என்ற பணவீக்க (INFLATION ) குறிக்கோளை எட்டலாம் எனக் கூறியுள்ளார். இதே மாதிரி பணவீக்கம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படாவிட்டால் செப்ரெம்பர் 06, 2023இல் மீண்டும் வட்டி வீதம் அதிகரிக்கப்படலாம் எனவும் அறிக்கையில் கூறியுள்ளார்.

எனினும் இதுவரை வட்டிவீத அதிகரிப்பால், வீட்டு உரிமையாளர்கள் தமது ஆதனத்தை விற்க வேண்டிய இக்கட்டான நிலையில் இல்லை (stress sale) என தெரிய வருகின்றது. அத்துடன் ஏப்ரல் 2023இன் கணக்கின்படி மோட்கேஜ் கடனை செலுத்தாமல் தவிர்ப்பவர்கள் 0.35% ஆகவே காணப்படுகின்றது. இந்த பெறுமதி மிகமிகச் சிறியது.

எனினும் பணவீக்கம் குறையாததற்கு முக்கிய காரணம், அரசுகளின் அதீத செலவுகளே. அரசுகள் தமது செலவுகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வராவிட்டால், பணவீக்கத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியாது என கனடிய முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்று தனது ஆதங்கத்தை மிகவும் ஆணித்தரமாக தெரிவித்துள்ளது.

தனி நபர் தமது செலவைக் கட்டுப்படுத்துவது போல, அரசுகளும் தமது செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தது.

| | |
|---|---|
| கனடிய மத்திய வங்கி வட்டி | 5.0% |
| கனடிய வங்கிகளின் முதன்மை வட்டி | 7.2% |

07-12-2023



# மைத்திரியின் யாழ்ப்பாண வருகையும் அவரது எதிர்பார்ப்பும்

- விகிர்தன் -

முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

குறிப்பாக, யாழ் மாவட்ட கடற் தொழிலாளர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார். அந்த சந்திப்பில் உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் பாரதூரமானவை என்றும் நாடாளுமன்றத்தில் தாங்கள் இதனை எடுத்துரைத்து அழுத்தம் கொடுப்போம் என்றும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வந்த மைத்திரிபால சிறிசேன, பல்வேறு பட்ட சமூக மட்ட நிகழ்வுகளிலும், மக்கள் சந்திப்புகளிலும் கலந்து கொண்டார்.

உண்மையில் மைத்திரிபால சிறிசேனவின் யாழ்ப்பாண வருகை எதிர்வரும் தேர்தலை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. இலங்கையில் முதலில் வரப்போகும் தேர்தல் ஜனாதிபதித் தேர்தலாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் வடக்கிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது அவரது நோக்கமாக உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அங்கஜன் இராமநாதன் கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றதால் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தனது கட்சிக்குப் பெரும் ஆதரவு இருப்பதாக அவர் நம்புகின்றார்.

மைத்திரி, ரணில் இணைந்த கூட்டணிக்கு கடந்த காலத்தில் தமிழ் மக்கள் ஆதரவளித்தது உண்மைதான். நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த அவரிடம் தமிழ் மக்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டிருந்தமையும் உண்மையே.

ஆனால், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு எதனையும் அவர் நிறைவேற்றவில்லை. மாறாக, பிரதமராக இருந்த ரணில் விக்ரம சிங்கவுடன் முரண்பட்ட காலமே அதிகம். தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு நகர்வையும் அவர் மேற்கொள்ளவில்லை. இதற்கு மைத்திரி பால சிறிசேன மட்டும் காரணமில்லை. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவும் காரணம்தான்.

பின்னர், ரணில் விக்ரமசிங்கவை அகற்றுவ தற்காக. யாரை தன் எதிரியாக சித்தரித்து ஆட்சிக்கு வந்தாரோ அந்த மஹிந்த ராஜபக்ஸவுடனேயே கைகோர்த்ததுதான் அனைவரையும் வியப்பிலாழ்த்தியது. ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஸ தரப்பினர் தன்னை கொலை செய்ய முயன்றதாகவும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார். மஹிந்தவுடன் கூட்டுச் சேர்ந்த பின்னர் அது உண்மையில்லை அரசியல் பிரச்சாரத்திற்காக கூறப்பட்டது என வெட்கமின்றி சொன்னார். அப்போதுதான் மைத்திரி மிகப்பெரிய பொய்யர் என்பதை நாட்டுமக்கள் புரிந்து கொண்டனர்.

மைத்திரியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் (உயிர்த்தஞாயிறு தாக்குதல்) தொடர்பில் அவரே பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் குற்றவாளியாக காணப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு மைத்திரிபால சிறிசேனவிற்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. புலனாய்வுத் தகவல்களை கவனத்தில் கொள்ளவில்லை. பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பொறுப்பற்ற விதத்திலேயே நடந்து கொண்டார். தனக்கு எதுவும் தெரியாது என்றே அவர் கூறிவந்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து மைத்திரிபால சிறிசேன விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் தொடர்பில் தெரிவித்த கருத்தும் அவரது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்தியது.

பிரபாகரனின் மரபணு பரிசோதனை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், இறுதி யுத்த காலத்தில் இரண்டு வாரங்களுக்கு பதில் பாதுகாப்பு அமைச்சராக தான் இருந்ததாகவும். பிரபாகரன் கொல்லப்பட்டாரா என்பது கூட தனக்குத் தெரியாது என்றும், அதை பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். எல்லாமே மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த வர்களுக்காக 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், இதுவரை 15 மில்லியன் ரூபாயை மாத்திரம் அவர் வழங்கியுள்ளார்.

எஞ்சிய தொகையான 85 மில்லியன் ரூபாயை 2024 ஜூன் 30ஆம் திகதி முதல் வருடத்திற்கு 8.5 மில்லியன் ரூபாய் வீதம் 10 தவணைகளாக செலுத்தப்படும் என அவர் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளார் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எவ்வித பொறுப்புமின்றி ஒரு பொம்மை போன்று பதவிக் கதிரையில் அமர்ந்திருப்பவர்களால் மக்களுக்கு எதனையும் செய்ய முடியாது. நாட்டிற்கு ஏற்படும் ஆபத்தையும் அவர்களால் தடுக்க முடியாது.

---

# ரொறொன்ரோ...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

பிறந்தவர். அவர் 1970இல் 13 வயதாக இருக்கும்போது குடும்ப மாகக் கனடாவிற்குக் குடி பயின்றார். பின்னர் Guelph பல் கலைக்கழகத்தில் நுண்கலையில் கலை மானிப்பட்டம் 1979இல் பெற்றார். பட்டம் பெற்ற பின்னர் அவர் ஒரு கலைஞராகப் பணி யாற்றினார். அவர் சொந்தமாக ஒரு சிற்பக்கலைக் கூடத்தையும் 2014இல் ரொறொன்ரோ நகர முதல்வர் தேர்தலில் தோற்ற பின்னர் Ryerson பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஒலிவியா சோ 1988இல் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக 2003இல் வந்த Jack Laytonஐத் திருமணம் செய்தார். Jack Layton 2011ஆம் ஆண்டில் இறக்கும்வரை அவருடன் வாழ்ந்து வந்தார். இவர் Contonese, Mandarin மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் சரளமாக பேச வல்லவர்.



5 out of 102 Mayoral Candidates Thanks: CBC News

பெயர்ந்தார். அவர்கள் ரொறொன்ரோவில் சென். ஜேம்ஸ் ரௌண் இல் வாழ்ந்து வந்தனர். ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் மற்றும் சமயம் வைத்திருந்தார். அவர் ஓவியம் வரைவதை தொழிலாகவும் கொண்டிருந்தார். ஒலிவியா சோ தற்போதும் நேரம் கிடைக்கும் பொழுது ஓவியம் வரைகிறார்.




# நானிலம் போற்றும் நட்பு - 25



- அகணி -
authorakani@gmail.com

"பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்." (அதிகாரம் பழமை, குறள் 805) என்ற குறளிற்கு "வருந்தத்தக்க செயல்களை நண்பர் செய்தால் அதற்குக் காரணம் அறியாமை என்றாவது மிகுந்த உரிமை என்றாவது உணரவேண்டும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"துன்பம் தரத்தக்க செயலை நண்பர் செய்தாலும், அதை அவர் அறியாமையால் அல்லது உரிமையால் செய்ததாகக் கொள்ள வேண்டும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"சினேகிதர் செய்யும் வெறுக்கத்தக்க செயலும், உரிமையுடன் செய்வதாகும்." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."

"நண்பர் செய்யும் எச்செயலும் உரிமையுடன் செய்வதாகும்" என்ற அறிவுரையை இந்தக் குறள் தந்துள்ளது. இப்போது எல்லோரும் அறிந்த பிசிராந்தையார்-கோப்பெருஞ் சோழன் கதையைக் காண்போம்.

கோப்பெருஞ் சோழனை அவனுடைய மகன்கள் எதிர்த்தபோது, எயிற்றியனார் என்னும் புலவர் சொற்படி, நாட்டை மகன்களிடம் ஒப்படைத்துவிட்டு வடக்கிருந்தார். வடதிசை புனிதமான திசை என்பதால் பாண்டவ சகோதரர்கள் போல. வடதிசை நோக்கி நடந்து கொண்டே இருந்து பூமியில் உடல் விழுந்து இறப்பர் பலர். சிலர் இருந்த இடத்திலேயே வடதிசை நோக்கி அமர்ந்து இறப்பர். இந்த உண்ணா விரதத்துக்கு 'பிராயோபவேசம்' என்பது வடமொழிப் பெயர். இதுபற்றி இராமாயணத்தின் கிஸ்கிந்தா காண்டத்திலும் புறநானூற்றிலும் காணலாம்.

கோப்பெருஞ் சோழன் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதை அறிந்து பலரும் அவருடன் பந்தலில் உட்கார்ந்து உயிர்துறந்தனர். பொத்தியார் என்ற புலவரை மட்டும் சோழன் திருப்பி அனுப்பிவிட்டான். நீ ஆண் குழந்தை பிறந்த பின்னர்தான் இப்படி சாக முடியும் என்று வீட்டுக்கு அனுப்பிவிட்டான். ஆனால் மன்னர், ஒர் ஆசனத்தை மட்டும் பிசிராந்தையாருக்காக ஒதுக்கினான். எல்லோருக்கும் அது ஆச்சரியம். மன்னரே அவரோ தொலைதூரத்தில் உள்ளார், உங்களை பார்த்ததே இல்லை. அவரை நண்பர் என்று சொல்லி இடம் ஒதுக்கச் சொல்கிறீரே என்று வியந்தனர். அதற்கு சோழன் பதில் சொல்கிறான்...

"தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற்காலை நில்லலன் மன்னே (புறம்_215)

பாண்டிய நாட்டில் தொலைதூரத்தில் பிசிர் என்னும் ஊரில் என் நண்பன் இருப்பதாகச் சொல்லுவர். அவன் எனக்கு செல்வம் இருந்த காலத்தில் வாராவிட்டாலும் துன்பம் வந்த காலத்தில் வாராது இருக்க மாட்டான்.

அவருடைய ஆருயிர் நண்பர் புலவர் பிசிராந்தையார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததே இல்லை. ஆயினும் சோழன் எதிர்பார்த்தது போலவே பிசிராந்தையாரும் சாகும் வரை உண்ணா நோன்பில் கலந்து உயிர்நீத்தார்.

பிசிராந்தையார் கதைக்குரிய ஆதாரத்தை புறநானூறு பாடல் 213 தொடக்கம் பாடல் 223 வரையுள்ள பாடல்களில் காணலாம்.

புறநானூறு பாடல் 212 பாடியவர்: பிசிராந்தையார்,
பாடப்பட்டோன்: கோப்பெருஞ்சோழன், திணை: பாடாண், துறை: இயன் மொழி
"நுங்கோ யார் என வினவின், எங்கோக்
களமர்க்கு அரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கின் காமம் வீட ஆரா,
ஆரல் கொழுஞ் சூடு அம் கவுள் அடாஅ,
வைகு தொழின் மடியும் மடியா விழவின்
யாணர் நல் நாட்டுள்ளும், பாணர்
பைதல் சுற்றத்துப் பசிப் பகை ஆகிக்
கோழியோனே கோப்பெருஞ்சோழன்,
பொத்தில் நண்பின் பொத்தியொடு கெழீஇ,
வாய் ஆர் பெருநகை வைகலும் நக்கே".
இந்தப் பாடலுக்கான விளக்கத்தைக் கவனிப்போம்.

உன்னுடைய மன்னன் யார் என்று என்னைக் கேட்பீராயின், என்னுடைய மன்னன் உழவர்களுக்காக வடிக்கப்பட்ட விரும்பத்தக்க கள்ளை ஆமையின் அவித்த இறைச்சியுடன் ஆசைதீர அந்த உழவர்கள் உண்டு, சுடப்பட்ட கொழுத்த விலாங்கு மீனின் இறைச்சியைத் தங்கள் கன்னத்தில் அடக்கித் தம்முடைய தொழிலை மறந்து நீங்காத விழாக்களைக் கொண்டாடும் வளமை மிகுந்த சோழ நாட்டின் உறையூரில் உள்ள மன்னன் கோப்பெருஞ்சோழன். அவன் பாணர்களின் வருத்தமடைந்த சுற்றத்தாரின் பசியாகிய பகையைப் போக்குபவன். அவன் குறையில்லாத நண்பரான புலவர் பொத்தியாரோடு கூடி நாள்தோறும் பெருமகிழ்ச்சியுடன் இருக்கின்றான்.

இந்தப் பாடலில் கோப்பெருஞ்சோழனின் பெருமை கூறப்படுகிறது.
புறநானூறு 213, பாடியவர்: புல்லாற்றூர் எயிற்றியனார், பாடப்பட்டோன்: கோப்பெருஞ்சோழன், திணை: வஞ்சி, துறை: துணை வஞ்சி
"மண்டு அமர் அட்ட மதனுடை நோன் தாள்,
வெண்குடை விளக்கும் விறல் கெழு வேந்தே!
பொங்கு நீர் உடுத்த இம் மலர்தலை உலகத்து,
நின் தலைவந்த இருவரை நினைப்பின்,
தொன்றுறை துப்பின் நின் பகைஞரும் அல்லர்,
அமர் வெங்காட்சியொடு மாறு எதிர்பு எழுந்தவர்
நினையுங் காலை, நீயும் மற்று அவர்க்கு
அனையை அல்லை, அடு மான் தோன்றல்!
பரந்துபடு நல்லிசை எய்தி, மற்று நீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாயும் அவர்க்கு உரித்து அன்றே.
அதனால் அன்னது ஆதலும் அறிவோய்! நன்றும்
இன்னும் கேண்மதி, இசை வெய்யோயே!
நின்ற துப்பொடு நின் குறித்து எழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்,
நின் பெரும் செல்வம் யார்க்கும் எஞ்சுவையே?
அமர் வெஞ்செல்வ! நீ அவர்க்கு உலையின்,
இகழுநர் உவப்பப் பழி எஞ்சுவையே!
அதனால் ஒழிக தில் அத்தை நின் மறனே! வல் விரைந்து
எழுமதி! வாழ்க நின் உள்ளம்! அழிந்தோர்க்கு
ஏமம் ஆகும் நின் தாள் நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால், நன்றோ வானோர்
அரும் பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்து எதிர் கொளற்கே".



இந்தப் பாடலுக்கான விளக்கத்தைக் கவனிப்போம்.

வேந்தே, நீ வெற்றி கண்ட விறல் (வீறாப்பு) விரிந்திருக்கும் வெண்கொற்றக் குடை உடையவன்தான். என்றாலும் எண்ணிப்பார். உன் மக்கள் இருவர் உன்மேல் போர் தொடுத்திருக்கின்றனர். நினைத்துப் பார்த்தால் அவர்கள் உன் பகைவர் அல்லர். என்றாலும் போர்க்கோலத்தோடு உன்னை எதிர்த்து நிற்கின்றனர். வேறு வகையில் நினைத்துப் பார்த்தாலும், நீயும் அவர்களுக்குப் பகைவன் இல்லை. அப்படி இருக்கும் நிலையில் போர்க்குதிரைமேல் வருகிறாய். போரில் வெற்றி கண்ட புகழைப் பரப்பிக்கொண்டு நாடாண்டு நீ மேலுலகம் செல்லும் காலத்தில் உன் ஆட்சித் தாயம் அவர்களுக்குத்தானே உரித்தாகப்போகிறது இதனையெல்லாம் நீயே அறிவாய். இன்னும் சொல்கிறேன் கேள். இந்த ஆட்சியுரிமைப் போரில் உன் மக்கள் தோற்றால் பிற்காலத்தில் உன் செல்வத்தையெல்லாம் யாருக்குத் தரப்போகிறாய். போரை விரும்பும் செல்வனே! நீ அவர்களிடம் தோற்றால் உன்னை இகழ்பவர்கள் மகிழும் பழிதானே உனக்கு மிச்சமாகும். அதனால் போரிடுவதைக் கைவிடுக. நெஞ்சழிந்து வாழ்பவர்களுக்கு உதவுவதற்காக விரைந்தெழுந்து வருக. உன் ஆட்சிக்கு அடியில் வாழ்பவர்களுக்கு நல்லது செய்ய வருக. வானுலகப் பெருமக்கள் ஆசைத் துடிப்போடு உன்னை விருந்தினனாக வரவேற்கும் செயலைச் செய்வாயாக!

இந்தப் பாடலில் கோப்பெருஞ்சோழனுக்கு அரசினை பிள்ளைகளிடம் கையளிக்குமாறு அறிவுரை கூறப்படுகிறது.

புறநானூறு 215, பாடியவர்: கோப்பெருஞ்சோழன்,
திணை: பாடாண், துறை: இயன் மொழி
"கவைக் கதிர் வரகின் அவைப்புறுவாக்கல்
தாதெரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ, வெண்தயிர்க் கொளீஇ,
ஆய் மகள் அட்ட அம் புளி மிதவை
அவரை கொய்யுநர் ஆர மாந்தும்
தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே,
செல்வக் காலை நிற்பினும்
அல்லல் காலை நில்லலன் மன்னே".

இந்தப் பாடலுக்கான விளக்கத்தைக் கவனிப்போம்.

பிளவுபட்ட கதிர்களையுடைய வரகைக் குத்திச் சமைக்கப்பட்ட சோற்றையும், தாதாக உதிர்ந்த எருவுடைய தெருவில் அரும்புகளோடு தழைத்த வேளைச்செடியின் வெண்ணிறப் பூக்களை வெள்ளை நிறமுள்ள

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# தமிழ்நாட்டில் ஆளுநர் அரசியல் எடுபடாது!

**நேர்காணல்: சூர்யா வெற்றிகொண்டான்  நேர்கண்டவர்: கண்ணன்**

தமிழ்நாட்டில் ஆளும் கட்சியான திமுக வுக்கும் ஒன்றிய அரசின் பிரதிநிதியான ஆளுநர் ஆர்.என். ரவிக்கும் இடையே யான மோதல் உச்சகட்டத்தை எட்டி யுள்ளது. திமுக அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்து உத்தர விட்டு, பின்னர் அந்த உத்தரவை திரும்பப் பெற்றுக்கொண்ட ஆளுநரின் நடவடிக்கை யால் தமிழக அரசியல் களம் மீண்டும் பரபரப்பாகியுள்ளது. ஆளுநர் மீது குற்றம் சாட்டி குடியரசு தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். ஆளுநரை ஒன்றிய அரசு திரும்ப அழைக்க வேண்டும் என்று திமுக கூட்டணி கட்சிகள் போராடி வருகின்றன. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, திமுக தலைமைக் கழக வழக்கறிஞரும் தலைமைக்கழக செய்தி தொடர்பாளருமான சூர்யா வெற்றி கொண்டானை சந்தித்தோம். பிரபல திமுக பேச்சாளர் மறைந்த வெற்றிகொண்டான் புதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஆளுநருக்கும் ஆளும் கட்சிக்கும் இடையேயான மோதல் கொஞ்சம் கொஞ்சமாக வலுவடைந்து இப்போது ஒரு அமைச்சரையே ஆளுநர் நீக்கும் அளவுக்கு சென்றுள்ளது. ஆளுநரின் இந்த நடவடிக்கையை எப்படி பார்க்கிறீர்கள்?**

கேலிக்கூத்தாகத்தான் பார்க்கிறோம். அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் தான் காலையில் ஒன்று பேசிவிட்டு மத்தியானம் மாற்றி பேசுவார். இப்போ ஆளுநரும் அதுமாதிரி பேச ஆரம்பித்துவிட்டார். அவர் ஐபிஎஸ் படித்தவர் என்கிறார்கள். அவர் நடந்து கொள்வதைப் பார்த்தால் அது மாதிரி தெரியவில்லை. ஆளுநர் உத்தரவு இல்லை அது. அவரை ஆட்டி வைக்கும் மோடி உத்தரவு அது. இதற்கெல்லாம் அஞ்சும் கட்சி திமுக இல்லை.

**இந்திய சட்டத்தில் என்ன உள்ளது? ஆளுநருக்கு அமைச்சரை நீக்கும் அதிகாரம் உண்டா இல்லையா?**

ஆளுநரின் அதிகாரம் என்ன என்பது சட்டப் புத்தகத்தில் தெளிவாக வரையறுக் கப்பட்டுள்ளது. ஐபிஎஸ் படித்த ஆளுநர் அதை படித்தாரா இல்லையா தெரிய வில்லை. சட்டத்தில், முதலமைச்ச ரும் அமைச்சரவையும் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட்டுதான் ஆளுநர் செயல்பட வேண்டும் என்று தெளிவாக உள்ளது. ஆனால், இங்கே ஆர்.என். ரவி ஆளுந ராக வரவில்லை, ஆர்.எஸ்.எஸ். காரராகத்தான் வந்துள்ளார். எனவே, சட்டப் புத்தகம் பற்றி கவலைப்படாமல் அவருக்கு கொடுக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றும் வேலையை செய்கிறார். நாங்கள் அரசியலைப்பு சட்டத்தை மதிக்கிறோம், அதனால் அமைதியாக இருக்கிறோம் அவர்கள் மிதிக்கிறார்கள்.

**ஆனால், கடந்த அதிமுக ஆட்சியின் போது 2017இல் ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் ரத்து செய்யப்பட்ட போது தமிழக ஆளுநர் பொறுப்பு வகித்த வித்யாசாகர் ராவிடம் மு.க.ஸ்டாலின் கையெழுத்திட்ட கடிதத்துடன் துரைமுருகன், உள்ளிட்ட திமுகவினர் மும்பை சென்று ஒரு மனு கொடுத்தார்கள். அந்த மனுவில், “முதல்வர் மற்றும் அமைச்சர்களை உடனடியாக ராஜினாமா செய்ய ஆளுநர் உத்தரவிட வேண்டும். அவர்கள் ராஜினாமா செய்யத்தவறும் பட்சத்தில்,**

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டும் - நாடும் நடப்பும்


சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன்.எப்.கென்னடி அமெரிக்கப் நாடாளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு, நுகர்வோர் உரிமைகள் தொடர்பாக 1962. மார்ச்.15இல் உரையாற்றினார். நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக உலகில் ஒரு நாட்டுத் தலைவர் ஆற்றிய முக்கிய உரை இதுவாகும். நுகர்வோர் தொடர்பாகக் கரிசனை காட்டிய முதலாவது நாட்டுத் தலைவர் இவராவர். அதன் விளைவாக நுகர்வோரின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்பட்டதன் விளைவாக 1983 மார்ச், 15 ஐக்கிய நாடுகள் சபையால் உலக நுகர்வோர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றது. நுகர்வோரின் உரிமைகள்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடனேயே நுகர்வோர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இத்தினத்தை நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அதன்மூலம் நுகர்வோர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

பாவனை நோக்கம் குறித்து பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்து பயன்படுத்துபவர் நுகர்வோர் ஆவர். சந்தையின் முக்கிய எஜமானர் நுகர்வோர்தான். இவர்கள் இல்லையெனில் சந்தை இல்லை. சுற்றுச் சூழலுக்குத் தீங்கு ஏற்படாத மற்றும் பருவ நிலையை பாதிக்காத வகையில் நிறுவனங்களின் தயாரிப்புக்கள் மற்றும் நுகர்வோரின் பயன்பாடு இருக்க வேண்டும். நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நாட்டு அரசாங்கமும் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்பது நுகர்வோர் பிரச்சனைகள், சேவைக் குறை



பாடு, வணிக நடைமுறை போன்றவற்றுக்கு தீர்வு தரும் சட்டமாக உள்ளது. மருத்துவக் குறைபாடுகள், வங்கிகள், வீடுகட்டிக் கொடுப்போர் பிரச்சனைகள் மற்றும் பொருட்கள் தரத்திலுள்ள குறைபாடுகள் போன்றவற்றுக்கு நீதிமன்றத்தை அணுகலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள் நுகர்வோரின் நலனைப் பாதுகாப்பதாகும்.

நுகர்வோர் பொருட்களையும், சேவைகளையும் நுகரும்போது அவர்களுக்குள்ள உரிமைகளே நுகர்வோர் உரிமைகள் ஆகும். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் உரிமை, நட்டஈட்டினால் பெற்றுக்கொள்ளும் உரிமை, சூழல் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளும் உரிமை, சுமூகமான சூழலில் வாழ்வதற்கான உரிமை, நுகர்வோருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தப் பொருளையும் எதிர்த்துக் கேள்வி கேட்கும் உரிமை, தான் வாங்கும் பொருட்கள் எந்த அளவு பாதுகாப்பானது என்பதை நுகர்வோர் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளார். உதாரணமாக மின்சாரப் பொருட்கள் கொள்வனவு செய்கிறார் என்றால், இதில் பாதிப்புக்கள், பழுதுகள் இருக்கிறதா? என்பதை தெரிந்துகொள்ள, இது தொடர்பாக கேள்வி கேட்கும் உரிமை, நல்ல பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை, தனது தேவைக்கு, விருப்பத்துக்கு ஏற்ப பொருட்களை தேர்வு செய்யும் உரிமை நுகர்வோருக்கு உண்டு. இந்தப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. தாங்கள் செலுத்தும் தொகைக்கேற்ப சில பொருட் களின் தரம் இல்லையென நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர். நுகர்வோர் பொருட்களின் தரம், விலை மற்றும் பொருட்களுக்கான நுகர்வோர் உரிமை குறித்து அறிந்திருத்தல் வேண்டும்.

தரக்குறைவான பொருட்கள் விற்பனை, பொய்யான விளம்பரங்கள், பொய்யான உத்தரவாதம்மூலம் விற்பனை செய்தல், ஏமாற்று அறிவிப்புக்கள் போன்றவற்றால் நுகர்வோர் பாதிக்கப்படாதிருக்க, நிவாரணம் பெற செய்யப்பட்டுள்ள வழிவகைகள் பற்றி நுகர்வோர் நன்கு அறிந்திருந்தால்த் தான் விற்பனையாளர்மீது நடவடிக்கை எடுக்க முடியும். விற்பனையாளர் நுகர்வோர் பொருட்களையும், சேவைகளையும் விலையினூடாகவே நுகர்வு செய்வதில் திருப்தி அளித்தல் வேண்டும். நுகர்வோர் திட்டமிட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதை ஊக்குவித்தல், போட்டியான சூழ்நிலையில் நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டும். நுகர்வோரது உடல், உளம் பாதிப்பு அடையாத வகையில் திருப்தி அளிக்கப்படல் வேண்டும். பொருட்களை வாங்கும்போது கலப்படம் உள்ளதா? தர முத்திரை உள்ளதா? உற்பத்தியாளர் முகவரி, காலாவதித் திகதி, விற்பனை ரசீது போன்றவற்றை சரிபார்த்து வாங்க வேண்டும். வாடிக்கையாளருக்குப் பாதிப்பு ஏற்படும்போது இழப்பீடு பெறும் வசதி உண்டு. மேற்படி விடயத்தில் விற்பனையாளர் தவறு விடும் பட்சத்தில் அவருக்கு தண்டனை, அபராதம் என்பன கிடைக்கும் வாய்ப்புக்கள் உண்டு.

நுகர்வோர் ஒரு பொருளை வாங்குகிறார் என்றால் அந்தப் பொருள் குறித்த விளக்கத்தை அளிக்கக்கூடிய கடமை விற்பனையாளருக்கு உண்டு. நுகர்வோர் வாங்கும் பொருள் குறித்து எந்தக் கேள்வி

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




Investor's Corner

TRIPLEX FOR SALE

★ Unique investment opportunity.
★ Purpose built Triplex in the City
★ Two - 2 Bed Rooms and One - 1 Bed Room
3 Kitchen
★ Large lot
★ 5 Parkings

Asking Only
$1,549,900

Owner can Live and Rent - 2 Units

If Interested to view Call :
George Paranthaman, Broker 416.277.9044
Raja Mahendran, Broker/Owner 416.315.9397

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
Tel: 416.321.6969 * Independently owned and operated.

# நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தயிரில் இட்டு, ஆயர்மகள் சமைத்த அழகிய புளிக்கூழையும், அவரைக் காயைக் கொய்பவர்கள் நிறைய உண்ணும், தெற்கில் உள்ள பொதிகை மலையையுடைய பாண்டிய நாட்டில் உள்ள பிசிர் என்னும் ஊரில் உள்ளவன். அவன் என் உயிரைப் பாதுகாப்பவன். நான் செல்வத்துடன் ஆட்சியில் இருந்த வேளையில் என்னைப் பார்க்காவிட்டாலும், நான் துன்பத்தில் இருக்கும்பொழுது என்னைப் பார்க்காமல் இருக்க மாட்டான்.

இந்தப் பாடலில் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் மீது கொண்டிருக்கும் நட்பு எத்தகையது என்பது புலப்படுகிறது. இவ்வாறாக நட்பு பற்றிய கருத்துகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

இந்த இதழிலும் திருக்குறளில் நட்பு பற்றிய அறிவுரைகளையும், நட்பு பற்றிய பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் உண்மைக் கதை பற்றியும் ஆராய்ந்தோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நட்பு பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# தமிழ் நாட்டில்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

**அப்பதவிகளை நிர்வகிக்கும் உரிமையை இழந்த அவர்கள் அனைவரையும் ஆளுநர் பதவி நீக்கம் செய்ய வேண்டும்” என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதை அதிமுகவினர் எடுத்துக் காட்டுகிறார்கள். அமைச்சர்களை நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆளுநரிடம் மனு கொடுத்த திமுகவினர் இன்று ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று சொல்வது சரியா என்று கேட்கிறார்களே?**



ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை என்பது எங்களுக்கு தெரியும். மேலும், அன்றைய ஆளுநர் அன்றைய ஆளுங் கட்சிக்கு வேண்டப்பட்டவரும்கூட. அவர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டார் என்பது எங்களுக்கு தெரியாதா? ஆனாலும், ஏன் மனு கொடுத்தோம்? அதன்மூலம் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த ஊழல்கள் வெளியே வர வேண்டும் என்று அதை செய்தோம். ஒரு சரியான எதிர்கட்சியாக செயல்பட்டோம். அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த ஊழல்கள் மீதெல்லாம் இன்று ஆட்சிக்கு வந்ததும் நடவடிக்கை எடுக்கிறோம்.

**செந்தில் பாலாஜி மீது ஊழல் குற்றம்சாட்டப்பட்டு வழக்கு நடைபெறுகிறது. இந்நிலையில், ‘அமைச்சரவையில் செந்தில் பாலாஜி நீடிப்பது, அவர் மீதான நியாயமான விசாரணை உள்ளிட்ட சட்ட நடைமுறைகளை எதிர்மறையாகப் பாதிக்கும். இது இறுதியில் மாநிலத்தில் அரசமைப்பு இயந்திரத்தை சீர்குலைக்க வழிவகுக்கும் என்ற நியாயமான அச்சங்கள் உள்ளன’ என்று ஆளுநர் ரவி குறிப்பிடுகிறார். குற்ற வழக்கில் சிக்கியிருப்பவர் அதிகாரமிக்க அமைச்சராக தொடர்ந்தால் வழக்கு விசாரணையை பாதிக்கும் என்ற ஆளுநரின் அச்சம் நியாயமானதுதானே?**

நான் உங்களை கேட்கிறேன்; செந்தில் பாலாஜி மேல் நடவடிக்கை எடுக்கும் மோடியும் ஈடியும் (அமலாக்கத் துறை) நியாயமானவர்களா? ஒன்றிய பாஜக அரசில் 33 அமைச்சர்கள் மேல் இதே ஈடி வழக்கு உள்ளது. 14 பேர் மேல் குற்ற வழக்கு இருக்கிறது. பலர் மேல் கொலை வழக்கே உள்ளது. அவர்களை எல்லாம் ஏன் அமைச்சரவையில் வைத்திருக்கிறீர்கள்? அவர்களை அமைச்சரவையில் இருந்து வெளியே போகச் சொல்லுங்கள், நாங்கள் செந்தில் பாலாஜியை வெளியே அனுப்புகிறோம்.

செந்தில் பாலாஜி வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்கிறேன் என்றுதானே சொல்கிறார். அப்புறம் ஏன் உங்களுக்கு அவசரம்? இதே செந்தில் பாலாஜி நாளையே பாஜகவில் சேர்ந்துவிட்டால், அவரை போல் உத்தமர் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அதுதானே இந்தியா முழுவதும் நடக்கிறது. அதற்கு செந்தில் பாலாஜி தயாராக இல்லை. எனவே, இந்த வழக்கு, மிரட்டல் எல்லாம் நடக்கிறது.

**இந்த விவகாரத்தில் ஆளுநருக்கு அதிகாரமில்லை என்பதுதான் திமுகவின் எதிர்வினையாக இருக்கிறது. ஆனால், குற்ற வழக்கில் சிக்கி கைது செய்யப்பட்டிருப்பவரை அமைச்சராக வைத்திருப்பது தார்மீக அடிப்படையில் சரியானதா? இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜியை திமுக அரசு வைத்திருப்பதற்கு காரணம் என்ன? அதனால் அரசுக்கு என்ன பயன்? பணி செய்யாத ஒருவரை அமைச்சர் பதவியில் நீட்டிப்பது வீண் தானே?**

செந்தில் பாலாஜி பழிவாங்கப்படுகிறார் என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு. இன்று இவர்களுக்கு பயந்து செந்தில் பாலாஜியை தூக்கினால், அடுத்து இது இன்னொருவருக்கு நடக்கும். எனவே, செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக தொடர்வார் என்னும் முடிவை முதல்வர் மு.க. ஸ்டாலின் எடுத்துள்ளார். முதல்வர் சட்டப்படிதான் இதை செய்துள்ளார். எங்களை கேள்வி கேட்கும் நீங்கள், சட்டத்துக்கு மாறாக நடந்துகொள்ளும் ஆளுநரை ஏன் கேள்வி கேட்பதில்லை. மணிப்பூர் பற்றி எரிகிறது. இதுவரை பிரதமர் அங்கே செல்லவில்லை. இதுபற்றி மோடியிடம் கேட்பீர்களா? அவர்தான் பத்திரிகையாளர்களையே சந்திப்பதில்லையே, எப்படி கேட்பீர்கள்.

**தமிழகத்தில் இதுவரை ஆளுநர்களுக்கும் அரசுக்கும் இடையே இத்தனை பெரிய மோதல் நடந்ததில்லை. அரசு அனுப்பிய பல சட்ட முன்வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் வைத்துள்ளார். இதனை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?**

நாங்கள் முன்னிறுத்தும் ‘திராவிட மாடல் ஆட்சி’ என்பதன் மீது ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். அவர்களுடையது ஆரிய ‘மாடல்’. எங்களுடையது திராவிட ‘மாடல்’. அனைவருக்கும் சம உரிமை என்பது தான் திராவிட ‘மாடல்’. ஆரிய மாடல் பிறப்பால் மனிதர்களைப் பிரிப்பது. ஆரிய மாடலை அழித்தது தான் திராவிட ‘மாடல்’. கேள்வி கேட்பதுதான் திராவிட ‘மாடல்’. எதிர்த்துக் கேள்வி கேட்க எங்களுக்கு பெரியார் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

தமிழ் மொழியை நாங்கள் பாதுகாக்கிறோம். தமிழ் நாட்டில் இந்தியை திணிக்க அனுப்பப்பட்ட ஏஜெண்ட் போல் ஆளுநர் செயல்படுகிறார். தமிழ்நாட்டின் முதல்வரி டம் ஆளுநரின் அரசியல் எடுபடாது. ‘ஆன்லைன் ரம்மி’ சட்ட முன்வரைவை முதலில் எதிர்த்துவிட்டு இப்போது எப்படி ஆளுநர் கையெழுத்திட்டார்? அதேபோல் மீதமிருக்கும் அத்தனை சட்ட வரைவுகளுக்கும் கையெழுத்து வாங்குவோம்.

# நுகர்வோர்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

களைக் கேட்டாலும் அதற்குப் பதிலளிக்க அந்த நிறுவனம் கடமைப்பட்டுள்ளது. நுகர்வோர் தான் வாங்கிய பொருளால் முழுத் திருப்தி பெறவேண்டும். அவ்வாறு இல்லையெனின் அது தொடர்பாகக் கேள்வி எழுப்பலாம். சில ஹோட்டல்களில் சுத்தமான முறையில் உணவு இல்லை, சுகாதாரமற்ற சுற்றுச்சூழல், சுத்தமில்லா உணவு, நுகர்வோர் தான் வாங்கிய பொருளில் அந்நிறுவனம் கூறியதற்கு மாறாக இருத்தல் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நுகர்வோர் கேள்வி எழுப்புவது குறைவு. ஒருசில சுகாதார பரிசோதகர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்கின்றனர். சில சாப்பாட்டுக்கடைகளில் உணவு பழுதடைந்திருக்கும் ஆனால் அவை வீசப்படாது, நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதை யாரும் அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. சில பகுதிகளில் காபன் இல்லாது ரசீது வழங்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் பொருளாதார நலன் நுகர்வில் தங்கியுள்ளது. விலையேற்றத்துக்கு ஈடு கொடுக்க முடியாத நுகர்வோர் கடனாளியாகின்றனர். கடனை ஓர் எல்லையில் வைத்துக்கொள்ளாத நுகர்வோர் அதிகரிக்கும் கடன் தொல்லையால் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். இது வாழ்வின் மகிழ்ச்சியை சீர்குலைக்கின்றது.

இலங்கையில் நுகர்வோரைத் தவறாக வழி நடத்துதல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, உணவுப் பொருட்களில் சேர்க்கப்படாத இரசாயனங்களை பயன்படுத்தியமை ஆகிய தவறுகளுக்காக வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையில் பதிவுகள் உள்ளன. 1979ஆம் ஆண்டின் முதலாம் இலக்கப் பாவனையாளர் அதிகாரச் சட்டத்தில் நுகர்வோருக்கான உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பாவனையாளர்களின் நலன்கருதி 2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பாவனை யாளர் விவகாரங்கள் அதிகாரச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது நுகர்வோரைப் பாதுகாக்கும் சட்டம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் ஏற்பாட்டின்படி வியாபார நிலையத்தில் விற்பனை செய்யும் பொருட்



களுக்கான மொத்த வியாபார விலைப் பட்டியல், சில்லறை வியாபார விலைப் பட்டியல் என நுகர்வோரின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும். ஆனால் இதனை கடைகளில் காண்பது முடியாத காரியம். பிரிவு 20இன்படி விலையில் பாரபட்சம் காட்டுவது குற்றச் செயலாகும். ஆனால் பாரபட்சத்தை தாராளமாகக் காணலாம். பொருளில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களை மாற்றுதல், அழித்தல், மங்கச் செய்தல், வைத்துக்கொண்டு விற்பனை செய்ய மறுத்தல், பாவனையாளருக்கு எல்லா விபரங்களும் அடங்கிய பற்றுச்சீட்டு வழங்கப்படாமை. இவை சட்டத்தில் குற்றச்செயலாகும். ஆனால் இவை குறைவில்லாது நடைபெறுகின்றது.

நுகர்வோர் அலட்சியமாக இருப்பதாலும், நுகர்வோர் தொடர்பான சட்டங்கள், நுகர்வோர் உரிமைகள் பற்றி பூரண விளக்கம் இன்மையும் நுகர்வோர் பாதிக்கப்படக் காரணமாகும். நுகர்வோர் கல்வி இல்லையாயின், நுகர்வோர் பாதுகாப்பு என்னும் நோக்கத்தை நாம் அடைந்து கொள்ள முடியாது. உலக நுகர்வோர் தினத்திலாவது நுகர்வோர் விழித்துக்கொள்ள வேண்டும்.

## BASEMENT FOR RENT

**BELLAMY & ELLESMERE**
2 bedroom + den walk-out bsmt for rent. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.648.1673**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom in bsmt for rent. Sep. entrance. Sep.washroom and kitchen.Close to all facilities. Avail. immediately.
**தொடர்புகளுக்கு: 647.846.9060**

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Parking Close to all facilities. Avail. immediately.
**தொடர்புகளுக்கு: 416.802.2827**

**KENNEDY & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
**416.904.9781 / 647.909.3063**

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Single or couple preferred. Close to facilities. Avail. immediately.
**தொடர்புகளுக்கு: 647.822.5949**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. Entrance.1 Washroom, parking. Close to school, etc. Available August 01 2023.
**தொடர்புகளுக்கு: 647.296.7932**

**WARDEN & ELLESMERE**
2 bedroom bsmt for rent with parking. Low Rent. Small family or Seniors preferred.
தொடர்புகளுக்கு: **647.717.3702**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry & new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, parking &laundry. Close to all amenities.
தொடர்புகளுக்கு: **416.879.7373**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking.Close to all facilities. Couple preferred. Avail. immediately. **தொடர்புகளுக்கு: 416.613.1792 / 437.477.6307**

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to mall, school, TTC. Family preferred. Avail. immediately.
**647.806.5987 / 647.710.8479**

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.616.7840**

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.843.0011**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

## BASEMENT FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. Sept. 01, 2023.
தொடர்புகளுக்கு**: 647.771.7693**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent . Sep. entrance, kitchen, washroom, living room Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.7399**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**PORTUNION & SHEPHERD**
1 bedroom studio bsmt with 1 parking, full washroom, sep. entrance. Food service available. Close to all facilities. Avail. August 01, 2023.
**647.767.3262 / 647.808.1240**

**MORNINGSIDE & MCLEVIN**
1 bedroom for rent in a house. Parking & laundry. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**MCCOWAN & DENISON**
**1 Room for rent in a 5 bedrooms house. பெண்கள் விரும்பத்தக்கது. 1 Parking. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**NEILSON & FINCH**
Rooms for rent. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 437.427.4090**

**MARKHAM & 14TH AVENUE**
1 Room for rent in main floor. Ladies (Students or working) preferred. No pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.822.8446**

**WESTNEY & ROSSLAND (Ajax)**
1 bedroom for rent in a house. Avail. immediately. Close to all facilities.
**தொடர்புகளுக்கு: 437.688.2440**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom for rent in a bsmt. Couple / ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food. Couple / Single preferred.Avail. immediately.
தொடர்புகளுக்கு:**: 647.667.0482**

**TAUNTON & BURKHOLDER**
2 Bedroom for rent in a new house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
**647.203.8774 / 647.467.1622**

## HOUSE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
3 bedroom House for rent. And 2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**416.832.5381/647.855.8264**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt plus living room with Seperat entrance. School is near by & TTC is near by. Walmart and other Srilankan groceries also nearby.
Cell: ***416-857-4619*** Rajah

## *BASEMENT FOR RENT*

**ANDERSON & BROCK (WHITBY)**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.520.5883**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
**2 bedroom bsmt for rent in a 3 bedrooms bsmt. Sep. entrance, laundry & No parking. Senior Couple preferred. Rent $1500. Avail. immediately.**
தொடர்புகளுக்கு**: 416.830.3932**

## APTRTMENT FOR RENT

**MARKHAM & HWY 401**
**Tuxedo court**
1 bedroom for rent in a 2 bedroom Apt. Share kitchen, share washroom. No parking. Ladies preferred. Close to all facilities.
தொடர்புகளுக்கு**: 416.830.3932**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Rent $2,200 + Utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.6573**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent . Sep. entrance & laundry. Close to all facilities. No pets, no smoking & no alcohol. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

மேலும் பக்கங்கள் 13,14,15

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedrooms for rent in a 3 bedrooms Condo. Single, students, working people preferred. No pets, No smoke & No alcohol. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.298.9718**

## ROOM FOR RENT

**BRIMLEY & FINCH**

1 bedroom for rent in a bsmt. Shared washroom & kitchen. Avail. immediately. Close to all facilities. Working professional / student. Female preferred.

**தொடர்புகளுக்கு: 416.522.2436**

## CONDO. ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 bedroom for rent in a 2 bedroom condo. Parking & internet. Close to all facilities. Avail. immediately.

**தொடர்புகளுக்கு:647.694.3535**

## ROOMS FOR RENT

1 Bedroom for rent - $900.
2 bedrooms for rent -$1,700.
3 bedrooms for rent - 2,500.

தொடர்புகளுக்கு:

**647.764.3697**

## HOUSE/ BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**

3 Bedrooms newly renovated bunga low house for rent. **Also** 3 bedrooms bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to TTC & all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.569.0657**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

Contact: **647.686.8590**

## முதியோர் பராமரிப்பு

**Condo**வில் அறை மற்றும் உணவு கொடுத்து முதியோர் ஒருவரை வைத்து பராமரிப்பு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **416.271.1727**

## HOUSE FOR RENT

**Brock Road & HWY 2 – Pickering**
**3 Bedrooms & a den Town house for rent. Avail. Sept. 01, 2023. Spacious Kitchen, Living Room & Visitor Room. Close to all amenities. Rent $2,950.**
**647.960.6427 or 416.671.0085**

## HOUSE FOR RENT

**CHURCH & ROSSLAND**

4 Bedroom Detached & 3 wash rooms. 3 parking, laundry. Close To Public Transportation, Shops, Parks, Trails & School bus routes.

தொடர்புகளுக்கு: **416.509.7247**

## *CONDO. FOR RENT*

**HWY 401 & KENNEDY**

Tridel condo. 2 bedroom, 2 washroom Avail. July 18th, 2023. 2 month Rental. Good condition. 24 hrs. concierge.

தொடர்புகளுக்கு: **Nathan**
**647.786.1580 / 416.720.7439**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/ Working people preferred. Close to TTC & all the facilities. Avail. August 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT

**VICTORIAPARK & LAWRENCE**

1 Bedroom annex house for rent. Very convenient loction. Students / couple/ working ladies. Avail. immediately.

**416.288.9575/647.762.9575**

## காணி விற்பனை

திருகோணமலை **Alas Garden** இல் ***Lyca /Kentower*** பக்கத்தில், நடக்கும் தூரத்தில் கடற்கரை, புல்மோட்டை சாலையுடனும் மின்சார, குழாய்கிணறு வசதி கொண்ட 20 பேர்ச் உறுதிக்காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்**கு: 647–205–8317**

## COTTAGE FOR RENT

**SANDBANK BEACH**

Modern 5 bedroom furnished Cottage is available for short term / Long term rental. Includes unlimited Bell Fibe internet. Daily/ weekly/ monthly rental available.

Contact : **416.662.1529**

## BASEMENTS & HOUSE FOR RENT

(1) **Ajax** Basement Available Salem & Taunton,1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking. (2) **Pickering** House & Basement Available. Whites Road& Taunton 3 bedroom house & 2 washroom.2 bedroon,1washroom, sep. entrance, 2 car parking. (3) **Markham** Basement - 2 bed room,1washroom, Kitchen sep. entrance. தொடர்புகளுக்கு: **647. 282.5782**

## BASEMENT FOR RENT

**SCAR. GOLFCLUB & BRIMORTON**

2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking. Close to school, Centannial college & TTC. No smoking & no pets. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.622.0350**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**

உங்களது **rooms, house or basement**இனை சட்டரீதியாக **University / College Students** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**
**HomeLife Future Realty Inc. Brokerage**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

2 bedroom + den bsmt for rent. Sep.entrance, Parking & laundry. Close to Amazon, Canada Post, TTC, YRT, Major Banks, Srilankan grocery stores & all other facilities. No pets, no smoking & no alcohol. Working female or students preferred. Avail. immediately.

**Please Contact 647.284.2735**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share - male preferred. $1400 per month including utilities. No kitchen available. **Also** another room for rent.Rent $900. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## HELP WANTED

ஸ்காபரோவில் வாழும் நடமாடக்கூடிய 65 வயதான பெண் ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **647. 888.9437**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**பிறேம்–647.835.5244**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement**

**647-861-8240**

## OFFICE SPACE FOR RENT

**Office space for rent in Scarborough. Large room.**

On Finchdene Square. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: **647.885.1540**

## முதியோர் பராமரிப்பு

உங்கள் வீட்டில் உள்ள முதியோர்களுக்கு உதவ நாங்கள் உள்ளோம். உங்கள் வீட்டிற்கே வந்து உங்கள் முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எங்களை அழைக்கவும். எங்களுடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைக்கலாம். தொடர்புகளுக்கு:

**புனிதா (PSW) – 647.580.5244**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான (Graduated in Medical office administration) பெண் ஒருவருக்கு மணமாகாத 38 - 40 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:

**416.551.9737 / 647.937.1243**

மேலும் பக்கங்கள் 12,13,15

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*

- Advanced function
- Calculus & vectors
- Data management

*All Classes available in Scarborough & Stouffville*



Mr.S.F.Xavier (Teacher)

**Contact: 647.340.9490 / 416.732.2228**

**கசப்பான உண்மைகளை வெளிப்படையாக சொன்னால் பல உறவுகள் பிரிந்துவிடுவதால் தான், இனிப்பான பொய்களை பலபேர் அழகாக சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்...!!**

## HANSON COLLEGE

Hanson College Offers Summer Classes

Free English Classes Grade 11 & Grade 12 Starting July 17, 2023.

Other Courses: Hospitality Restaurant Hotel & Management, Travel & Tourism, General Business, Project Management, Ext.

2 years Certificate course. மேலதிக தொடர்புகளுக்கு:

Vishwa - 647.403.3127/ sviswanathan062@gmail.com

## JOBS AVAILABLE

Full time & part time jobs available at a busy Canadian Restaurant in Durham Region. Looking for **Front House Manager & Cook.** Immediate positions available.

தகுந்த சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு.

### BOOK KEEPING JOB AVAILABLE

**LOOKING FOR AN OFFICE HELPER.**

Knowledge and Experience of Quick Books & Accounting is an asset.

Part time or Full time job available.

### HOUSE KEEPING JOB AVAILABLE

**9th LINE & 14th AVENUE**இல் அமைந்துள்ள வீடு ஒன்றில் பகுதி நேரம் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை.


Looking for a **HOUSE KEEPER to do Laundry, cooking & cleaning. Will pay $1000 Cash per month for part time.** Permanent Job. Full time also available.

Please call- KRIS: **647.802.7021**

Email: **restaurantjobhiring@gmail.com**

## சோற்றைக் குறைத்திடச் சோகம் தீர்ந்திடும்!

பானை வயிறும் பன்றிபோல் உருவமும்
ஆனை நடையும் அடிக்கடி நோயும்
மோனை ஏனடி? முழுதும் சோறடி
ஊனை மாற்றிட உருவமும் மாறுமே!
தட்டம் நிறைத்து தாளிதக் கறியுடன்
வெட்டுறோம் சோற்றை வெகுவாய்த் தினந்தினம்
முட்டையும் இறைச்சியும் மீனுடன் பலதும்
கொட்டியே வளர்க்கிறோம் பானை வயிற்றையே!
கட்டுடல் பெருத்து கழுத்தொடு வயிறும்
கெட்டியாய் இருந்த காலும் வீங்கி
இட்டும் முட்டும் இடுப்பு வலியொடு
பெட்டைகள் இருப்பின் பார்ப்பரோ பெடியள்?
பூதம் போலப் பொலிந்திட வைத்திடும்
பாதம் வீங்கிப் பருத்திட வைத்திடும்
ஊதி உடலின் உருவமும் மாற்றிடும்
சாதம் குறைத்திட சுகங்கள் பெருகுமே!
சோறு தருகுது சக்கரை வியாதியை
சோறே தருகுது சோர்வொடு பருமனை
சோற்றைக் குவித்து சோகம் பெருக்கா(து)
சோற்றைக் குறைத்துச் சுகத்தொடு வாழ்வமே!



அருட்கவி ஞானகணேசன்

# NIRUTHAN NADARAJAH
*(Licenced Insurance Agent)*

*Insurance Products & services offered*

**Insurance**

- Life Insurance
  - *Term*
  - *Whole Life*
  - *Universal Life*
- Accident & Sickness Insurance
  - *Medical*
  - *Disability*
  - *Critical Illness*
- Travel Insurance
  - *Visitors*
  - *Supper Visa*
  - *International Student*
- Group Insurance

**Investment**

- RESP
- RRSP
- TFSA
- Segregated Funds
- Annuity



## Part Time Job / பகுதி நேர வேலை வாய்ப்பு

நீங்களும் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவராக பணிபுரிந்து சிறந்ததொரு வருமானத்தை ஈட்ட முடியும்

மாதம் $5000 முதல் $10,000 வரையிலான வருமானத்தை இலகுவாக ஈட்ட முடியும்

**What we offer...**

- Free Information
- Free Advice
- Free guidance
- Free Coaching
- Free Training
- Low Start up cost

**What you Achieve...**

- Financial Literacy
- Financial Security
- Financial Freedom
- Own Your Future

Contact
Niruthan Nadarajah (NR)
647-534-1819
nnadarajah2283fc@wfgmail.ca

*Secure yourself and your loved ones*

*What you need is what we do*

# STORE FOR LEASE

எந்தவிதமான வியாபாரங்களுக்கும் ஏற்ற இடம் விரும்பின் தற்போதுள்ள ஆடை அணிகலன்கள் விற்பனை நிலையத்தை இருப்புக்கள் (INVENTORY) தளபாடங்களுடன் எடுத்து நடத்தலாம்.

ANY TYPE OF RETAIL BUSINESS OR TAKE OVER EXISTING CLOTHING BUSINESS WITH THE INVENTORY AND FURNITURES / FIXTURES

LOCATED @ 2901 MARKHAM RD., UNIT # 5, SCARBOROUGH, ON

CONTACT : SULOSAN THANGARAJAH
**(647) 865–0742**

CONTACT : KIRI **(416) 428.3333**

# wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

*Brampton* – Sandalwood Pkwy/Bramalea
(3Brm + 3Bath) [$3,199/m]

*Brampton* – Torbram/Peter Robertson - Bsmt
(2Brm + 1Bath) [$1,950/m]

*Toronto*– Lakesshore/Parklawn - Condo
(2Brm + 2Bath) [$3,250/m]

*Toronto* – Lesile/Steeles – Condo Townhouse
(4+11Brm + 3Bath) [$3,200/m]

*Toronto* – Yonge/Steeles Ave W – Semi-Detached
(4+Brm + 2Bath) [$2,700/m]

*Toronto* – Warden/Finch – Detached
(4+1Brm + 4Bath) [$4,000/m]

**Available for Rent**

*Oshawa* – Sincoe St/King St - Bungalow
(3Brm +1Bath) [$2,200/m]

*Whitby*– Dundas/Newmand Blvd - Bsmt
(2Brm+1Bath) [Call us]

*Whitby*– Dundas/Hwy 412 - Bsmt
32Brm+2Bath) [$1,850/m]

*Pickering*– Taunton Rd/Whites Rd - Townhouse
(4Brm +3Bath) [$3,100/m]

*Pickering*– Brock/Taunton – Condo Town House
(3+1Brm +3Bath) [$2,800/m]

*Ajax*– Salem Rd/Rossland Rd/Audley Rd – Detached
(4Brm +3Bath) [$3,900/m]

*Ajax*– Westney Rd/Ravencroft – Detached
(3Brm +2Bath) [$2,550/m]

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# வீரன் - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

வீரனூர் என்ற கிராமத்தில், அக் கிராமத்தின் தெய்வமான வீரனை ஒரு வயதானவர் வழிபட்டு வருகிறார். ஒருநாள் வீரனின் கோயிலைத் தாண்டி குமரன் என்ற மாணவன் தனது நண்பர்களுடன் செல்லும்போது அவரை மின்னல் தாக்குகிறது.

சிகிச்சைக்கு சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட குமரன் பல ஆண்டுகளுக்குப் பிறகு வீரனூருக்குத் திரும்பி வருகிறார்.

அங்கு அவரது ஊரில் ஒரு பெரிய நிறுவனம் நிலத்திற்கு கீழ் பெரும் கேபிள் (Cable) ஒன்றை பதிப்பதற்குப் பாதையை அமைப்பதற்காக ஊர்மக்களின் காணி களையும், வீரனின் கோயிலையும் வாங்கப் போகின்றனர் என அறிகிறார்.

இத்திட்டம் ஊரைப் பாதிக்கும் என்பதால் குமரன் தனது நண்பர்களுடன் அதைத் தடுக்க முயலுகிறார்.

ஏன் இத்திட்டம் கூடாது என்றும், குமரன் அதை எப்படித் தடுக்க முயலுகிறார் என்றும் இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



தமிழில் விஞ்ஞான புனை கதைப்படங்கள் அரிதாக உள்ளன. அதுவும் சூப்பர் ஹுரோ (Superhero) படங்கள் மிகக் குறைவாக உள்ளன. எனவே இப்படத்தில் குமரனுக்கு மின்னல் தாக்கியதால் புதிய சக்திகள் கிடைத்ததாகக் காட்டியது தமிழ்படவுலகுக்கு ஓரளவு புதிதாக இருந்தது. ஆனால், தமிழ் திரைப் படங்களில் நீண்டகாலமாக புராண, வரலாற்று மற்றும் கற்பனைப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே அரிதாகக் காணப்படும் சூப்பர் ஹுரோ/விஞ்ஞானப் புனைகதைகள் உள்ள படத்தையும், தமிழருக்குப் பழக்கமான கிராமப்புற கடவுள் கதையையும் (Mythological) ஒன்றாக்கியது இப்படத்தின் பலமாகும்.



அதாவது கடவுள் நம்பிக்கையில்லாத குமரன் தனக்கு நடந்ததையும், தான் நடக்க வைப்பதையும், விஞ்ஞானத்தின் மூலமாகவும், உளவியல் மூலமாகவும் விளக்குகிறார். படத்தின் போக்கில் இவற்றை ஏற்றுக்கொள்ளலாம்.

இக்கதை வீரன் கோயில் சம்பந்தப்பட்ட படியினால் குமரனின் நண்பரின் தாத்தாவைப்போல் படத்தின் நிகழ்ச்சி களுக்கு வீரனே காரணம் எனவும் நம்பலாம்.

உதாரணத்திற்கு குமரனுக்குப் பல செயல்களுக்கு விஞ்ஞான விளக்கங்கள் இருந்தாலும், தற்செயலாக அவரைத் தாக்கிய மின்னலும், சரியான நேரத்தில் அவர் வீரனூருக்கு வந்தது போன்ற சில சம்பவங்களுக்கு விஞ்ஞான விளக்க மில்லை. எனவே கடவுளை நம்புவோரும், நம்பாதவரும் இப்படத்தை ஆர்வமாகப் பார்க்கலாம்.

இருந்தாலும் படத்தில் சில காட்சிகளில் கவனக் குறைபாடு தெரிகிறது. வில்லன் கதாபாத்திரமும் நம்ப முடியாத மற்றும் முக்கியமில்லாத காட்சிகளாக இருப்பதால் அவை ஏற்கக் கடினமாக இருந்தன.

பழைய கதைகளையும் புதிய கதை அமைப்பையும் சேர்க்கும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

# கனடா – சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்றுகூடல்

குரு அரவிந்தன்

சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்று கூடல் 10-7-2023 ஞாயிற்றுக் கிழமை ஸ்காபரோவில் உள்ள மோணிங்சைட் பூங்காவில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் மக்களின் நலன் கருதி 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஐக்கிய மன்றம் 21 வருடங்களை நிறைவு செய்திருக்கின்றது. தாயகத்திலும், கனடாவிலும் உள்ள சண்டிலிப்பாய் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு, அதற்கேற்ற அட்டவணைப்படி சேவை நலன் கொண்டு இயங்குகின்றது.

கனடாவில் வாழும் சண்டிலிப்பாய் மக்கள் பிள்ளைகளுடன் குடும்பமாக வந்து ஒன்று கூடியிருந்தனர். பொதுவாக இப்படியான நிகழ்வுகளுக்கு இளந்தலைமுறையினர் வருவதைத் தவிர்ப்பதுண்டு. ஆனால் இங்கே பல இளந்தலைமுறையினரைக் காணக்கூடியதாக இருந்தது. காலை உணவு, மதிய உணவு, சிற்றுண்டி ஆகியன பரிமாறப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதாவது ஒரு உணவை வீட்டிலே தயாரித்துக் கொண்டு வந்திருந்தனர். உறவுகளையும், நண்பர்களையும் சந்தித்து உரையாட முடிந்தது. வந்தவர்கள் எல்லோருக்கும் ஏற்ற வகையில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று பரிசுகளும் கொடுக்கப்பட்டன.



சங்கத்தினால் போர்க்காலத்திலும், அதன்பின் கோவிட்-19 காலத்திலும் ஊர் மக்களின் நன்மைகருதிச் சங்கத்தினால் பல மருத்துவப் பட்டறைகள் சண்டிலிப்பாயில் ஏற்படுத்தப்பட்டு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், தமிழ் கலவன் பாடசாலைக்கும் கல்வி சார்ந்த மேலதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கோவிட் காலத்தில் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட் டன. மானிப்பாய் அரசமருத்துவ மனைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டில்



சண்டிலிப்பாய் அமைந்திருக்கின்றது. சண்டிலிப்பாய் பொதுவாக வயலும் வயல் சூழ்ந்த பகுதிகளையும் கொண்ட மருத நிலமாக இருக்கின்றது. வழுக்கை ஆறும், கூவல் என்று சொல்லப்படுகின்ற தெப்பக் குளமும், இங்குள்ள கோயில்களும் புராதன வரலாற்றைக் கொண்டவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்பதற்கிணங்க, மிகப் பழமைவாய்ந்த பல வழிபாட்டுத் தலங்கள், குறிப்பாகக் கண்ணகி அம்மன் ஆலயம் போன்றவை இங்கேதான் இருக்கின்றன. வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல, கல்வி அறிவூட்டும் கல்விக் கோயில்களும் இங்கு இருக்கின்றன. இங்கே உள்ள கல்வளை பிள்ளையார் பற்றித்தான் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 'கல்வளை



அந்தாதி' பாடினார். அங்கணாக்கடவை கண்ணகி அம்மன் கோயிலும், மீனாட்சி அம்மன் கோயிலும் அருகருகே இருக்கின்றன. சீரணி அம்மன் கோயிலை யும் சேர்த்தால் மூன்று அம்மன் கோயில்கள் இங்கே இருக்கின்றன.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஐஸ்லாந்தின் நிலவதிர்வால் எரிமலை வெடிக்குமா?



குரு அரவிந்தன்

அத்திலாண்ரிக் சமுத்திரத்தில், வடதுருவ எல்லையில் இந்தத்தீவான ஐஸ்லாந்து இருக்கின்றது. திமிங்கிலங்களை அருகே சென்று பார்க்கக்கூடிய இத்தீவில், சாமத்திலும் சூரியனைப் பார்க்க முடியும். இங்கு குறுகிய காலத்தில் ஏற்பட்ட 2200



நிலவதிர்வுகள் காரணமாக மக்கள் பயந்து போய் இருக்கின்றனர். எந்த நேரமும் எரிமலை வெடிக்கலாம் என்று எதிர் பார்க்கின்றனர். இச்சிறிய தீவில் சுமார் 30இற்கும் மேற்பட்ட எரிமலைகள் இருக்கின்றன. பூமிக்கடியில் உள்ள தட்டுக்கள் முட்டிக் கொள்வதால், இந்த நிலநடுக்கம் ஏற்படுகின்றது. இங்கே உள்ள எரிமலை ஒன்று 2010ஆம் ஆண்டு வெடித்தபோது விமானப் போக்குவரத்தே அப்பகுதியில் ஒருவாரகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. புகையும், சாம்பலும் பல மைல் தூரங்களுக்குக் காற்றோடு பரவி மாசடைய வைத்திருந்தன.




ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்க்குவிக் பகுதியிலேயே இந்த நில அதிர்வுகள் இப்போது பதிவாகி இருக்கின்றன. அதன் காரணமாக இப்பொழுதும் அங்குள்ள மக்கள் பயப்படுகின்றார்கள். பொருளாதார வசதிகளுக்காகச் சுற்றுலாப் பயணிகளையே அதிகம் நம்பியிருக்கிறார்கள். பொருட்களை இறக்குமதி செய்வதால் பொருட்களின் விலை இங்கு சற்று அதிகமானது. குற்றங்களே நடக்காத நாடு என்பதால் வீதிகளில் பொலிசாரைக் காணமுடியாது. நான் அங்கு நின்ற நாட்களில் ஒரே ஒரு பொலிஸ்காரரைக் கோப்பிக் கடையில் சந்தித்து உரையாட முடிந்தது. ஆங்கிலமும் பேசும் இங்குள்ள மக்கள் மிகவும் அன்பாகப் பழகக் கூடியவர்கள். வீடுகள் கூட்டமாக இல்லாமல், தனித்தனியாகவே அங்குமிங்குமாக இருக்கின்றன. மலைச்சரிவில் உள்ள சில வீடுகளின் கூரைகளைப் புற்கள் வளர்ந்து மூடியிருக்கின்றன. பபின் என்று சொல்லப்படுகின்ற அழகிய பறவைகளை இங்கு காணமுடிந்தது. செம்மறி ஆடுகளும், குதிரைகளும் நிறைய



இருக்கின்றன. சிக்காக்கோவில் 'பான்பிட்ஸா' போல, இங்கே கிடைக்கும் 'ஐஸ்லாண்டிக் கொட்டோக்' மிகவும் ருசியானது.

நோர்ஸ் இனத்தைச் சேர்ந்த வைக்கிங் காலப்பகுதியில்தான் இங்கு குடியேற்றங்கள் எற்பட்டன. சுமார் 3 இலட்சம் மக்கள்தான் இங்கு வாழ்கின்றனர். பெற்றோர் விரும்பியவாறு பிள்ளைகளுக்கு இங்கே பெயர் வைக்க முடியாது. தொடர்வண்டிகள் இங்கு இல்லை. இவர்களது முன்னோர்கள் ஒரு காலத்தில் பயங்கரமான கடற் கொள்ளையர்களாக



இருந்தனர். கழுத்தைக் கோடாரியால் வெட்டுவது, மரத்திலே கட்டி உயிரோடு எரிப்பது போன்ற தண்டனைகளைக் கொடுத்தார்கள். இங்குள்ள காட்சியகத்தில் இதுபோன்ற தண்டனைக் காட்சிகளைப் பார்க்க முடிந்தது. இன்னுமொரு காட்சிப் பொருளாக 2ஆம் உலக யுத்தத்தில் ஜெர்மனியால் சுட்டு விழுத்தப்பட்ட ரஸ்ய விமானத்தின் உடைந்த பாகங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் அமெரிக்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. தேடுதல் செய்தபோது அமெரிக்காவிடம் இருந்து ரஸ்யா அந்த விமானங்களை வாடகைக்கு எடுத்திருந்தது தெரியவந்தது.

நிலத்திற்கு அடியில் இருந்து திடீர் திடீரென ஒரு பனைமர உயரத்திற்கு நீர் ஊற்றுக்கள் சீறிப்பாய்கின்றன. நிறைய நீர்வீழ்ச்சிகளும் இருக்கின்றன. சுடு தண்ணிக் குளங்களும் இங்கு இருக்கின்றன. வீடுகளைச் சூடாக்க இந்த சூடான தண்ணீரையும், நிலவடிச் சூட்டுகற்றையும் பயன்படுத்துகின்றார்கள். தீவைச் சுற்றி வருவதற்கு நல்ல நிலையில் 'றிங்ரோட்' என்ற நெடுஞ்சாலையை அமைத்திருக்கிறார்கள். வண்டியை வாடகைக்கு எடுத்து விரும்பிய இடங்களைச் சென்று பார்க்கக்கூடிய வசதிகள் உண்டு. பனிக்காலத்தில் சிறிய



வீதிகளை மூடிவிடுகிறார்கள். இக்காலத்தில் 'நொதேன் லைட்' என்று சொல்லப்படுகின்ற வானத்தைப் பல வர்ணங்களில் பார்க்க முடியும். நோர்வே நாட்டு மன்னனின் ஆட்சிக்காலத்தில் இந்தத் தீவுகளுக்குப் பெயர்சூட்டும்போது தவறு செய்து விட்டார்கள். மாலுமிகள் தகவல் தெரிவித்தபோது ஒரு தீவு பனியாலும், அருகே உள்ள இன்னும் ஒரு தீவு பச்சைப் பசேலென்று தாவரங்கள் சூழ்ந்திருப்பதாகவும் அறிவித்தபோது, நேரடியாகச் சென்று பார்க்காததால் அருகே இருந்த பனியால் சூழப்பட்ட கிறீன்லாந்திற்கு அந்தப் பெயரையும், தாவரங்கள் வளர்ந்திருந்த இந்தத் தீவக்கு ஐஸ்லாந்து என்றும் வரலாற்றுத் தவறு காரணமாகப் பெயர் நிலைத்து விட்டது.

இதேபோன்ற எரிமலைகள் ஹவாய் தீவகளிலும் இருக்கின்றன. அமெரிக்காவின் ஒரு மாகாணமாகக் ஹவாய் தீவுகள் இருப்பதால், தொழில் நுட்ப அறிவியல் சார்ந்த வசதிகள் அங்கே நிறைய இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் அருகே செல்வதைத் தடுப்பதற்காக வேலிகள் போட்டிருக்கிறார்கள். கந்தகப் புகையைச் சுவாசித்தால், உடலுக்குக் கேடு தரும் என்பன போன்ற எச்சரிக்கை வாசகங்களையும் எரிமலைப் பகுதிகளில் அறிவிப்புப் பதாகை மூலம் தெரியப்படுத்தி இருக்கின்றனர். இதைவிட நில அதிர்வு, எரிமலை வெடிப்பு போன்றவற்றை முற்கூட்டியே கணித்து எச்சரிக்கும் அலாரங்களையும் பொருத்தி இருக்கின்றார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கு அவை எப்படி இயங்குகின்றன என்பது போன்ற செய்கை முறைகளையும் செய்து காட்டுகின்றார்கள். இப்படியான வசதிகளால் சமீபகாலங்களில் ஹவாயில் உடமைகள் அழிக்கப்பட்டாலும், உயிர்ச்சேதம் குறைந்திருப்பதை அறிய முடிகின்றது. இந்த வசதிகள் ஐஸ்லாந்தில் இருக்கவில்லை.




**சேர்ப்பது மிகவும் கடினம் செலவு செய்வது மிக எளிது.**
**பணம் மட்டும் அல்ல அடுத்தவர்**
**உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் நல்லெண்ணமும் கூட...**


$ 638,000
TRIDEL CONDO
FOR SALE
181 VILLAGE GREEN SQ.
(KENNEDY & HWY401)
2 bedrooms + Den
1 Parking + 1 Locker
2 full baths
840 sq. ft.
Corner unit
PARA TISIKULASINGAM
SALESPERSON
(647) 296-0596
RAJA MAHENDRAN, Broker/Owner
(416) 315-9397
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc., Brokerage*
O : 416-321-6969 F: 416-321-6963
*Each office independently owned and operated.